ஒருவகை வாழை நல்லமுறையில் பயிரிடப்பட்டு வருகிறது ஆனால் அந்த வாழை காய்த்து பழமான மூன்றாவது நாளிலேயே புழு ஏறிவிடுகிறது. எனவே, ஒரு பனானா கார்ப்பரேஷன் அமைத்து உடனடியாக, அவைகளை மேல்நாட்டுக்கு ஏற்றுமதி செய்வதற்கு ஏற்பாடு செய்யும் உத்தேசம் அரசாங்கத்திடம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்காக தென்மண்டலக் குழு ஒன்று ஏற்படுத்தப்படுகிறது. அந்தக் குழுவின் மூலம் இந்தத் திட்டம் ஆராயப் படும். வெளிநாடுகளுக்கு கப்பல்களில் அனுப்பினால், எத்தனை நாட் களுக்குப் பழங்கள் அழுகாமல் இருக்கும் என்பது ஆராயப்பட வேண்டும். அதற்குரிய திட்டத்தைத் தயாரிப்பதற்கு இப்போது இரண்டு லட்சம் ரூபாய் செலவில் வாழைகள் பயிரிடுவதற்கான ஒரு திட்டம் ஏற்பாடு செய்யப் படுகிறது. அதை எப்படி ஏற்றுமதி செய்வது என்பதற்கு நான்கு மாநிலங்கள் அடங்கிய தென்மண்டலக் குழு ஒரு அமைப்பை ஏற்படுத்தி ஆராய்ச்சி நடத்துகிறது.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, தமிழ்நாட்டிலேயே ஒரு சிறந்த இனமாகிய "மட்டி" வாழை நாகர்கோவிலில் இருக்கிறது. அதற்கு இப்போது நோய் ஏற்பட்டு, அந்த இனமே இல்லாமல் அழிந்துபோகின்ற நிலையில் இருக்கிறது. அந்த இனத்தைப் பாதுகாக்க அரசாங்கம் நட வடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: கனம் உறுப்பினர் அவர்கள் இப்போதுதான் அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கிறார் கள். அதுபற்றி உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. தி. பொன்னுமலை: தலைவரவர்களே, புதிதாகப் பயிரிடப்படும் வாழைகளுக்கு ஊசிமூலம் உரம் ஏற்றப்படுமா? ஜி. டி. நாயுடு அவர்கள் ஊசி மூலம் உரம் ஏற்றி, சிறந்த முறையில் அதிகமான பலனைப் பெற்றதாக அறிகிறோம். எனவே, அரசாங்கம் இந்தத் திட்டத்தை பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, ஊசி மூலம் ஏற்றப்படும் உரம் அதிக விலையுள்ளதாக இருக்கிறது. அப்படி உற்பத்தி செய்யப்படும் பழங்களை தகுந்த விலை கொடுத்து மக்கள் வாங்க மாட்டார்கள். மக்கள் அந்த நிலையில் இல்லை. இங்கே நாட்டு உரங்கள் போட்டு பயிரிடுகின்ற வாழைப்பழங்களைக் கூட மைசூரில் கொண்டுபோய் விற்கவேண்டியிருக்கிறது. வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்ற பழங்களைக் கொடுக்கின்ற வாழைகளுக்கு வேண்டுமானால் உறுப்பினர் அவர்களின் யோசனைப்படி ஊசி மூலம் உரங்கள் ஏற்றலாம். அதுபற்றி பரிசீலனை செய்யலாம்.

திரு. க. பழனிவேலன்: நமது தமிழ்நாட்டில் ரஸ்தாளி உயர்ந்த வாழையாக உள்ளது. எல்லா விசேஷ காலங்களிலும் ரஸ்தாளியை உபயோகப்படுத்துகிறோம். அது இன்றையதினம் அழியும் நிலையில் இருப்பதனால் அதைப் பாதுகாப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்வார்களா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : சிலசில பகுதிகளில் ரஸ்தாளியை விசேஷ காலங்களில் உபயோகப்படுத்துகிறார்கள். சில இடங்களில் மலைப்பழத்தைப் பயன்படுத்துகிறார்கள். சில இடங்களில் பூவன் பழத்தைக்கூடப் பயன்படுத்துகிறார்கள். ரஸ்தாளி வாழைக்கு வருகிற நோயைத் தடுத்து அதற்கு நல்ல பாதுகாப்பு அளிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, the Hon. Minister gave a long list of banana varieties. In Hosur taluk hundred cultivators have come forward to take up this cultivation and they are also writing letter that they want to send the fruits to foreign countries For this they want the best variety, as seed i.e,, best in colour, taste fruit-bearing quality and also capacity to withst and climatic conditions when sent to foreign countries. Will the Hon. Minister say whether he will be able to suggest the good variety for foreign export and also whether some subsidy is given to cultivators ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : இரண்டு லட்சம் ரூபாய் அளவில் திட்டமிட்டு, இந்தப் புதுவகையான வாழையைப் பயிரிடுவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டு ஆயிரம் ஏக்கரா அடுத்தது ஆயிரம் ஏக்கரா. என்பதால் 3 ஆயிரம் ஏக்கரா வரை இந்தப் புது ரக வாழை பயிரிட வகை செய்யப்பட்டிருக்கிறது. 72-ல் மட்டும் 86 லட்சம் ரூபாய் உதவி செய்வதற்கு வகை செய்யப்பட்டிருக்கிறது.

* 811 வினா—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

இந்த ஆண்டு (1971–72) வாழைப்பழ ஏற்றுமதியை அதிகரிக்க. அரசிடம் திட்டம் ஏதாவது உள்ளதா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்காக, ஏற்றுமதிக்கேற்ற வாழை வகைகளைத் தீவிரமாகப் பயிரிடும் திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன.

திரு. ஏ. எம். இராஜா : கோவை மாவட்டத்தில் மோரீஸ் வாழையைத் தீவிரப்படுத்தும் திட்டம் செயல்படுகிறது. அதற்கு மார்கெட் கிடையாது, அரசே அதை வாங்கி வெளிநாடுகளுக்கு அனுப்ப ஆவன செய்வார்களா ?

மாண்புமிகு திரு. மன்னை, ப. நாராயணசாமி : அதற்கு முன்னமேயே பதில் சொன்னேன். மைசூர் பகுதிக்கு அனுப்பி வருகிறோம். அதற்கான திட்டம் இப்போது செயல்பட்டு வருகிறது.

திரு. கே. என். குமாரசாமி : கோவைப்பகுதியில் பூவன் வாழை அதிகமாக உற்பத்தியாகிறது. அதை ஒட்டு மூலம் அதிகப் பலன் தரக்கூடியதாகச் செய்வதற்கு அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொள்ளுமா?

1972 மார்ச் 30]

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: நான் முன்னமேயே சொல்லியிருக்கிறேன். இதற்காகப் பணம் ஒதுக்கி காஞ்சீபுரம், செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் அதிக அளவில் உற்பத்தி செய்து வெளிநாடுகளுக்கு அனுப்பிவைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

திரு. சொ. காவேரிமணியம்: வேறு நாடுகளுக்கு அனுப்பப்பட்டாலும் உள்நாட்டிலேயே பயன்படுத்தப்பட்டாலும், வாழையை உற்பத்தி செய்கிறவர்களுக்கு புயலினாலும், வெள்ளத்தினாலும் வாழை பாதிக்கப்படுகிறபோது எந்த வகையில் உதவி செய்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: அதுப்பற்றி தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்கிறேன்.

சென்னை—மாமல்லபுரம் உல்லாசக் கப்பல்

* 635 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு பிற்பட்டோர் வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சென்னைக்கும் மாமல்லபுரத்திற்கும் இடையே உல்லாசக் கப்பல் போக்குவரத்து ஒன்றை நடத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: ஆம்.

திரு கா. வேழவேந்தன்: அப்படி கப்பல் விடும் திட்டம் எப்போது துவங்கும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மகாபலிபுரத்திற்கு ஒரு கப்பல் போக்குவரத்தை ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணம் சுற்றுலா வாரியத்தின் பரிசிலனையில் இருக்கிறது. அதற்கான ஆராய்ச்சியை நடத்தி ஒரு அறிக்கை தயாரித்தளித்திருக்கிறார்கள். அந்த அறிக்கை இப்போது அரசாங்கத்தின் பரிசிலனையில் உள்ளது.

திருமதி த. ந. அனந்தநாயகி: அந்தக் கப்பல் எங்கேயிருந்து புறப்படும்? எவ்வளவு கட்டணம் நிர்ணயிக்கப்படும் என்று தெரிவிப்பார்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மைலாப்பூரிலிருந்து கிளம்புமா அல்லது துறைமுகத்தில் இருந்து கிளம்புமா என்பதுதானே கவலை? (சிரிப்பு)

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தற்போது புதுவகையான கப்பல் ஹோவர்காப்ட் என்பது லண்டன், மாஸ்கோவைக் கவர்ந்திருக்கிறது. அந்தக் கப்பலைப் பற்றி இவர்கள் ஆராய்ந்துகொண்டிருக்கிறார்கள். அது தீர்மானமானவுடன் எங்கிருந்து புறப்படும், என்ன கட்டணம் நிர்ணயிக்கப்படும் என்பது தீர்மானிக்கப்படும்.

திரு. கோவை செழியன்: சென்ற ஆண்டு ஆளுநர் தலைமையில் சென்னையில் இருந்து மகாபலிபுரத்திற்கு ஒரு கப்பலில் நாங்கள் எல்லாம் அழைத்துச் செல்லப்பட்டோம். நிறைய அறைகளும், டான்சிங் ஹால் எல்லாம் இருந்தன. அதைப் பாத்தால் நடமாடும் ஹோட்டலைப் போல

இருந்தது. ஆகவே சென்னையில் இருந்து மகாபலிபுரத்திற்கு மிதக்கும் ஹோட்டல் ஒன்றையே ஆரம்பித்தால் லாபம் வரும். அதற்கு ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மிதக்கும் ஹோட்டல் என்பது சைகோன் என்ற ஒரே ஒரு இடத்தில் தான் இருக்கிறது. அதுவும் ஓடிக்கொண்டிருக்கவில்லை. ஒரே இடத்தில் தான் மிதக்கிறது. இந்தக் கப்பலைப் பற்றி முடிவு தெரிந்த பிறகு நாம் நடமாடும் ஹோட்டலாகவே ஏற்படுத்த முடியுமா என்பதை யோசிக்கலாம்.

திரு. எம். தேவராசன் : மகாபலிபுரத்திற்குப் புறப்படும் கப்பலின் வெள்ளோட்டத்தில் முதல் நாள் எல்லா சட்டமன்ற உறுப்பினர்களையும் அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : கப்பல் வந்த பிறகு அதுபற்றி யோசிக்கப்படும்.

*Government Rubber Plantations at Nagercoil*

* 812 Q.—Thiru J. JAMES : Will the Hon. the Minister for Electricity be pleased to state whether it is a fact that the Conservator of Government Rubber Plantations, Nagercoil and few of his subordinates such as Superintendents and Range Officers were made accused in a criminal case pending before the District Magistrate, Nagercoil ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : 7-2-1972-ம் தேதி நாகர் கோயில் மாவட்ட குற்றவியல் நீதிபதி, குற்றம் சாட்டப்பட்ட அனைவரும் குற்றமற்றவர்கள் என்று தீர்ப்பு வழங்கினார்.

திரு. ஜே. ஜேம்ஸ் : இந்த வழக்கில் சப் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் எந்த எந்த ஷரத்தின்படி இந்த அலுவலர்கள் மீது வழக்குப் போடப்பட்டது? எந்த எந்தக் குற்றங்கள் சாட்டப்பட்டன?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : ஐ.பி.ஸி. 427, 448 செக்ஷன்கள் கீழ் குற்றம் சாட்டப்பட்டது. வழக்கு விவரம் இல்லை. இதில் கொடுக்கப்பட்ட தீர்ப்பு—

I hold without the least hesitation that the accused have not committed any offence and that they are innocent என்பதாகும்.

Thiru R. PONNAPPA NADAR : May I know from the Hon. Minister whether any State defence was arranged for these officers and what is the expenditure incurred for defence in this case ?

மாண்புமிகு திரு. ஓ.பி. இராமன் : எவ்வளவு செலவு என்ற விவரம் இல்லை அரசாங்க அதிகாரிகளுக்கு என்ன என்ன உதவிகள் அளிக்கப்பட வேண்டுமோ அவை வழங்கப்பட்டிருக்கின்றன.